# வெள்ளி நூல் விழா அறிக்கை

**01.10.2021**

இளங்கலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு வெள்ளி தோறும் ஒரு நூல் அறிமுகம் செய்யும் நோக்கில் வெள்ளிநூல் எனும் நிகழ்வு 19.03.2021 அன்று தொடங்கப்பட்டது அன்று முதல் வெள்ளிதோறும் ஒரு வெள்ளிநூல் விழா நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 01.10.2021 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வெள்ளிநூல் விழா தொடங்கியது

இதில் கல்லூரி முதல்வர் முனைவர் கே. சத்யநாராயணா அவர்கள் தலைமையுரையும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. பிரகலாதன் முன்னிலையுரையும் நிகழ்த்தி இவ்விழாவினைத் தொடங்கி வைத்தனர். இந்நூல் அறிமுகவிழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்றனர். நமது சிந்திக் கல்லூரி பிறதுறைத் தலைவர்களும் மாணவர்களும் வருகை புரிந்தனர். இந்நிகழ்வில் வரவேற்புரையை நா. பிரியா, இரண்டாம் ஆண்டு மாணவியும் தொகுப்புரையை பா. ஜனனி, இரண்டாம் ஆண்டு மாணவியும் வழங்கினர்.

மாணவர்களுக்கு டி. செல்வராஜ் அவர்கள் இயற்றிய தோல் (சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்) நாவலை தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் டே. ஆரோக்கிய கிளீட்டஸ் கலா அவர்கள் அறிமுகம் செய்தார். தோல் பதனிடும் தொழிலாளர்களின் போரட்டங்கள், அத்தொழிலாளர்களின் குடும்பங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் இறுதியில் தொழிற்சங்கம் அமைத்து எவ்வாறு வெற்றி பெறுகிறார்கள் போன்ற நாவலில் வரும் கருத்துகளை மாணவர்களுக்கு புரியும் வண்ணம் எடுத்துரைத்தார். இறுதியில் நூல் குறித்த கருத்துகள் வினாக்கள் மாணவர்கள் பேராசிரியர்களால் கேட்கப்பெற்று அதற்கான விளக்கங்களும் பெறப்பட்டன. நன்றியுரையை ரா. வைஷ்ணவி இரண்டாம் ஆண்டு மாணவி கூறினார். விழா இனிதே நிறைவு பெற்றது

**முனைவர் த.பிரகலாதன்**
**துறைத்தலைவர்**
**தமிழ்த் துறை, சிந்திக்கல்லூரி**





சிந்திக்கல்லூரி
தமிழ்த்துறை
வெள்ளி நூல்
SINDHI COLLEGE
CH - 77


சிந்திக்கல்லூரி
தமிழ்த்துறை
வெள்ளி நூல்
தமிழின்பம் பருக !
SINDHI COLLEGE
CH - 77


சிந்திக்கல்லூரி
தமிழ்த்துறை
ஒரு நூல் அறிமுகம் )
வருக ! தமிழின்பம் பருக !
SINDHI COLLEGE
CH - 77


Chhabria Member
Kinger Member
Ahuja Member
B. Ahuja
P. Hinduja
P. Hinduja
P. Hinduja






நடத்தும்
வெள்ளி நூல்